## சிகிச்சை முறை :

| குழந்தையின் வயது | செய்யப்படும் சிகிச்சை |
|---|---|
| குழந்தை பிறந்ததும் | பெற்றோருடன் கலந்துறையாடல் / பால் புகட்டும் முறை |
| 3–5 மாதம் | பிளவுப்பட்ட உதடு மற்றும் மூக்கை சரி செய்தல் |
| 9 – 12 மாதம் | பிளவுப்பட்ட அண்ணம் சரி செய்தல் |
| 1 – 2 வயது | குழந்தையின் காது கேட்கும் திறனை சரிபார்த்தல் |
| 2 – 4 வயது | பேச்சுத் திறனை சரிபார்த்தல், பேச்சுப் பயிற்சி, பல் சீரமைப்பு சிகிச்சை – குழந்தைகள் பல் சீரமைப்பு மருத்துவர் மூலம் முறையான சிகிச்சை அளித்தல் |
| 4 – 6 வயது | பேச்சுத் திறனை வளர்த்தல், இது அண்ண அறுவை சிகிச்சைக்குப் பின் 10 – 15% வரை குழந்தையின் பேச்சாற்றலை அதிகரிக்கும் |
| 6 – 12 வயது | முறையான பல் சீரமைப்பு சிகிச்சை, தேவையேற்பட்டால் பற்குழிகளை அடைத்தல் |
| 13 – 19 வயது | முக அழகை மேம்படுத்த தேவையானால் மூக்கின் அமைப்பை திருத்தும் அறுவை சிகிச்சை |
| பெரியவர்கள் | மரபியல் கூறுகளை ஆராய்ந்து ஆலோசனை பெறுதல். |

## Smile Train Project

பிளவுப்பட்ட உதடு மற்றும்
அண்ணம் உடைய
குழந்தைகளுக்கு
**இலவச அறுவை சிகிச்சை**
மேலும் விபரங்களுக்கு :
**044-24765614**


மேலும் தகவலுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :

**டாக்டர். ஜோட்ஸ்னா மூர்த்தி**
பேராசிரியர், பிளாஸ்டிக் அறுவை சிகிச்சைப்பிரிவு
இயக்குநர், பிளவுப்பட்ட உதடு மற்றும் முகம் சீரமைப்பு பிரிவு,
ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மற்றும்
ஆராய்ச்சி நிறுவனம்
போரூர், சென்னை – 600 116.

Tel: 24765614, 24768403 Ext: 8648, 8198,
Fax: 24765614 / 24767008

Mobile : 9283222957 / 9841039820

E-mail jmurthy@satyam.net.in /
srmc.chennai@smiletrainasia.org

Web Page: www.cleftcare.org / www.srmc.edu

(Member of American Cleft Palate & Craniofacial Association)


# பிளவுப்பட்ட உதடு மற்றும் முகம் சீரமைப்பு பிரிவு





**ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்**
போரூர், சென்னை – 600 116

பிளவுப்பட்ட உதடு மற்றும் அண்ணம் உடைய குழந்தைகள் ஒவ்வொரு பத்து நிமிடத்திற்கு ஒன்று என்னும் வீதத்தில் இந்தியாவில் பிறக்கின்றது. இதை மாற்ற பண்படுத்தப்பட்ட ஒழுங்குமுறைசிகிச்சை தேவைப்படுகிறது.

நல்ல முறையில் மருத்துவ உதவியோடு ஒரு நல்ல ஆரோக்கியமான குழுந்தையை ஈன்றெடுப்பது மகிழ்ச்சிகரமான விஷயம். ஆனால் பிறப்பிலேயே பிளவுப்பட்ட உதடு மற்றும் அண்ணம் உடைய குழந்தையை ஈன்றெடுப்பவரும், அவரது குடும்பத்தாரும் அதிர்ச்சிக்குள்ளாகிறார்கள்.





இப்படிப்பட்ட குழந்தை ஒரு அசாதாரணமான குழந்தையாக இருப்பினும்கூட, நாம் உணர்ந்து கொள்ளவேண்டிய முக்கிய விஷயம் என்னவென்றால் இந்தக் குழந்தைகள் மற்ற குழந்தைகளைபோல் கர்ப்ப காலத்தில் ஆரம்ப வாரங்களில் (6–8 வாரங்கள்) முக தலை பாகங்களின் சேர்க்கை சரியானபடி இணையாததே எனலாம். மிகப்பெரும்பான்மையான பிளவுகள் உருவாவதற்கு எந்த காரணமும் இல்லை. சில சமயம் இந்த பிளவுகளுக்கு குடும்ப பின்னணியும் காரணமாகலாம். சிலவற்றிற்கு வேறு காரணமும் இருக்கலாம். கிரகணத்தின் போது நம்மை வெளிப்படுத்தியதாலோ, கெட்ட சகுனத்தாலோ அல்லது குறிப்பிட்ட உணவாலோ, பழத்தாலோ உருவாவது அல்ல. ஒரு குடும்பப் பிண்ணணியின் காரணத்தால் வருமோ என அச்சம் இருப்பின், தாய் கருவுற்ற ஆரம்ப காலத்தில் (6 முதல் 8 வாரங்களில்) காய்ச்சல் அல்லது வேறு எந்த காரணத்திற்கும் மருந்து உட்கொள்ளாமலும் முறையான வைட்டமின் மற்றும் ஊட்டச்சத்து உள்ள உணவை சாப்பிடுவதன் மூலமும் இதைத் தவிர்க்க முடியும்.









**பிளவுப்பட்ட உதடு மற்றும் அண்ணம் சீரமைப்புக் குழு :**
இக்குழுவின் குறிக்கோள் பிளவுப்பட்ட உதடு மற்றும் அண்ணம் உள்ள குழந்தைகளை இயல்பான முகத்தோற்றமுள்ள குழந்தையின் முகத்தைப்போல அறுவை சிகிச்சை மூலம் மாற்றி அமைத்தலாகும். இக்குறை உள்ளவர்களுக்கு பிறப்பு முதல் பெரியவராகும் வரை இக்குழுவினால் சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும் இது ஒரு கூட்டு முயற்சியானதால், இம்மருத்துவ முறைக்கு பெருமளவு பொருட்செலவு நேரிடாது. இவ்வியக்கம் பிளவுப்பட்ட உதடு மற்றும் அண்ணம் உள்ள குழந்தைகளுக்கு நல்ல ஊன்றுகோலாக மட்டுமில்லாமல் மேலும் இச்சமுதாயத்தில் இவர்களுக்கு இருக்கும் மனச்சுமையையும் மனபாரத்தையும் குறைக்கிறது.





பிளவுப்பட்ட உதடு மற்றும் அண்ணம் உடைய குழந்தைகளுக்கு முகம், காது மற்றும் இதர பிரிவுகளுக்கான அறுவை சிகிச்சை இன்று மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். சிறுகுழந்தைகளுக்கு அவசர சிகிச்சை அளிப்பதற்கு இக்குழுவில் தனி இயக்கம் ஒன்று செயல்படுகிறது. இக்குழந்தைகளை எங்களின் மருத்துவ முயற்சியாலும், பெற்றோரின் அரவணைப்பாலும் இச்சமுதாய கடலில் செவ்வனே சேர்ப்பிப்பதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும்.

## பிளவுபட்ட உதடு மற்றும் அண்ணம் கூட்டமைப்புக் குழு

பால் புகட்டுதலில் பிரச்சனைகள்
(குழந்தைநல மருத்துவர்)

கேட்கும் பிரச்சனை
(காது, மூக்கு, தொண்டை அறுவை சிகிச்சை நிபுணர்)



சீரமைப்பு – ஒப்பனை மருத்துவம்
(சீரமைப்பு ஒப்பனை – பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணர்)

மரபுவழி
(மரபியல் மருத்துவர்)

பேச்சு பிரச்சனை
(பேச்சு பயிற்சியாளர்)

பல் பாதுகாப்பு
(பல் சீரமைப்பு மருத்துவர், குழந்தைகள் பல் மருத்துவர், முகம் மற்றும் தாடை அறுவை சிகிச்சை மருத்துவர்)





பிளவுப்பட்ட உதடு மற்றும் அண்ணம் உடைய குழந்தைகள் இலவச அறுவை சிகிச்சைக்கு தொடர்புக்கொள்ளவேண்டிய
தொலைபேசி எண் : 044 - 24765614